**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**அசல் வழக்கு எண். 13/2022**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 17.10.2025-ஆம் நாளாகிய இன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 17.10.2025 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | ராமலிங்கம் | வயது.. | 72 |
| தந்தை பெயர் | சிவக்குழந்தை | | |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) என் தந்தையின் அப்பா பெயர் சுப்பராய படையாச்சி. என் தாத்தாவிற்கு என் தகப்பனார் மட்டும்தான் ஒரே வாரிசு. என் தாயார் பெயர் கோவிந்தம்மாள். என் உடன் பிறந்தவர்கள் 2 பேர் அண்ணன் கோவிந்தசாமி, அண்ணன் மன்மதன் எங்கள் பெற்றோருக்கு நாங்கள் மொத்தம் 3 பிள்ளைகள். உடன் பிறந்த சகோதரிகள் யாரும் இல்லை. என் அண்ணன் கோவிந்தசாமி இறந்துவிட்டார் அவர்களின் குடும்பம் கரிக்குப்பத்தில் வசிக்கிறார்கள். என் அண்ணனிற்கு மொத்தம் 5 பிள்ளைகள் தனசேகரன், சந்திரசேகரன், குணசேகரன், ஞானசேகரன், வித்யாசாகர். அண்ணன் மன்மதன் இறந்துவிட்டார் அவரது குடும்பம் கரிக்குப்பத்தில் வசிக்கிறார்கள். நான் கரிக்குப்பம் வன்னியர் தெருவில் வசிக்கிறேன். இவ்வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சரியாக நினைவில் இல்லை. பிரதிவாதிகள் இருவரும் பங்காளிகளா என்றால் ஆமாம், தூரத்து உறவினர்கள் முறையில் பங்காளிகள் ஆவர். பிரதிவாதிகள் என்னுடைய பங்காளிகள் இல்லை என்றால் சரியல்ல.

2) வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியதாக நான் கூறுவதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது, ஆக்கிரமிப்பு செய்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை பத்திரம் அடிப்படையில் கிரயம் கொடுக்கப்பட்டுவிட்டதா என்றால் அந்த ஆவணம் குடும்ப செலவிற்காக பணம் தேவைப்பட்டதால் அடமானம் வைத்ததற்காக Security அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது, கடனை பைசல் செய்து அந்த ஆவணம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. வா.சா.ஆ.2 கிரய உடன்படிக்கை ரத்து செய்யப்படவில்லை என்றாலும், அவ்வாறு செய்யப்பட்டு இருந்தால் அது சம்மந்தமான பைசல் ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. கிருஷ்ணம்மாள் என்பவரிடம் வாங்கப்பட்ட ரூபாய் 50 ஆயிரம் கடன் வட்டிக்காக வாங்கப்பட்டதா என்றால் ஆமாம்.வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் எந்த இடத்தில் குடியிருக்கிறார்கள் என்றால் வழக்கு சொத்தில்தான் ஆக்கிரமிப்பு செய்து குடியிருக்கிறார்கள்.

3) பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றாலும் வழக்கு சொத்தில் குடியிருப்பதற்கான சட்டப்பூர்வமான ஆவணங்கள் வைத்திருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் 1970-ல் இருந்து இவ்வழக்கு சொத்தில்தான் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் மரங்கள் வைத்து பராமரித்து வருகிறார்கள் என்றாலும் அந்த இடத்தை தாண்டி எந்த ஆக்கிரமிப்பும் பிரதிவாதிகளால் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சட்டவிரோதமாக தரிசு நிலத்தில் பட்டா பெற்று பொய்யாக வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் ஏழ்மையானவர்கள் என்றாலும் அவர்களுக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தோடு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(S/D.Thiru.D. Yuvaraj)
District Munsif cum Judicial Magistrate,
Portonovo.